பெறுகிற காரணத்தால் எல்லாப் பகுதிகளுமே இந்தத் திட்டத்தின்கீழ் பழுதுபார்க்கப்பட்டு சரி செய்யப்படும்.

திருமேனி ஏரி.

*வினா எண். 131—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி தாலுக்காவில் உள்ள திருமேனி ஏரியின் தென்கரையை பராமரிக்கவும், ஏரியில் நீரைத் தேக்கி விவசாயத்திற்கு நீர் அளிக்கவும், மீன் வளர்க்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : திருமேனி ஏரியின் தென் கரை ஏற்கனவே இவ்வாண்டு மராமத்து செய்யப்பட்டு விவசாயத்துக்கு பயன்படும் வகையில் நல்ல முறையிலுள்ளது. பாசன வசதிகளுக்கு, குந்தகம் ஏற்படுமாகையால் இந்த ஏரியில் மீன் வளர்க்க அனுமதிக்கப்படுவதில்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, மன்னார்குடி தாலூகா திருமேனி ஏரி ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்குப் பாசனம் கொடுக்கக்கூடியது. திருமனைக் கோடு பகுதியைச் சேர்ந்தவர்கள் லிப்ட் இரிகேஷன் ஸ்கீம் வேண்டுமென்று கோரி அரசுக்கு விண்ணபத்திருக்கிறார்கள். அதற்குரிய ஆயத் தீர்வை கட்டவும் தயாராயிருக்கிறார்கள். ஆகவே அந்தத் திருமேனி ஏரி தென் கரையை வலுப்படுத்தி பாசனத்திற்கு உகந்த முறையில் தண்ணீர் அளிக்க அரசு சிறப்புத் திட்டம் ஒன்றைத் தீட்டுவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : திருமேனி ஏரி பாமினி ஆற்றிலிருந்து தனிக் கால்வாய் மூலம் கொண்டு வரப்படும் தண்ணீரால் நிரப்பப்படுகிறது. இதன் மூலம் பதியப் பட்ட ஆயக்கட்டின் அளவு 265 ஏக்கர் 59 சென்ட்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் ஆயிரக்கணக்கான ஏக்கர் இந்த ஏரியின் மூலம் பாசன வசதி பெறுவதில்லை. மேலும் இந்த திருமேனி ஆற்றின் கரையைப் பலப்படுத்தி அதன் மூலம் மீண்டும் பாசன வசதியை அதிகரிக்க வேண்டும் என்று பொறியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : ஆயக்கட்டில் இருப்பது 265 ஏக்கர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது சரியாக இருக்கலாம். ஆயக்கட்டில் இல்லாத பகுதிகளையும் கணக்கில்

1979 பிப்ரவரி 22]

எடுத்துக் கொண்டால் ஆயிரக்கணக்கான ஏக்கர் இருக்கலாம். அதையும் பரிசீலித்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை விவசாயச் சங்கத்தின் கோரிக்கை மனு.

*வினா எண். 132—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் விவசாயப் பேரணி நடத்திய விவசாயிகள் விவசாயச் சங்கத்தின் சார்பாக அரசிடம் கோரிக்கை மனு ஏதேனும் கொடுத்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அவையின் முன் விபர *அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. அ. செல்லப்பா : தஞ்சை மாவட்டம், கடந்த புயல், வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டது என்பதை எல்லோரும் நன்கு அறிவர். அப்படியிருந்தும் 34 வட்டாரங்களில் 22 வட்டாரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட வட்டாரங்கள் என்றும், எட்டு வட்டாரங்கள் பெரும் பகுதி பாதிக்கப்பட்டவை என்றும், நான்கு வட்டாரங்கள் மட்டும் பாதிக்கப்படாத வட்டாரங்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அனைவரும் இந்தப் புயலால், வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு இன்றைய தினம் துயரத்திற்கு ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த நான்கு வட்டாரங்களையும் பாதிக்கப்பட்ட வட்டாரங்கள் என்று அறிவிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தஞ்சை மாவட்டத்தில் வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கெல்லாம் ஏற்கனவே அரசாங்கத்தின் மூலம் சலுகைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் இங்கே தந்துள்ள விவர அறிக்கையில்—அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தரப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன்—அந்த விவர அறிக்கையில் விளக்கமாகவும் விவரமாகவும் பல சலுகைகள்பற்றி, எடுத்துக் கொள்ளப்பட்ட

---

* 122-125ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.